**செய்தி வெளியீடு**
**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செ.வெ.எண். 169** **நாள் : 31.10.2018**

**மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களை சென்னையில் சந்தித்து பல்வேறு திட்டங்கள் குறித்த கோரிக்கை மனுவினை அளித்தார்கள்.**

பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள சென்னை வருகைபுரிந்துள்ள மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களை, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், இன்று (31.10.2018) சென்னையில் நேரில் சந்தித்து பல்வேறு திட்டங்கள் குறித்த கோரிக்கை மனுவினை அளித்தார்கள்.

இம்மனுவில், தமிழ்நாடு அரசு நகர்ப்புற மற்றும் ஊரக வளர்ச்சித்துறை பல்வேறு வளர்ச்சி திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மாநகரம் வேகமாக வளர்ந்து வரும் 2ம் அடுக்கு மாநகரமாகும். தென்னக இந்தியாவில் கோயம்புத்தூர் ஒரு பெரிய தொழில் வளர்ச்சி மையமாகவும் விளங்கி வருகிறது.

இதன் சிறப்பினை மேம்படுத்தும் வகையில், தற்போது மும்பை–பெங்களூரு வரையில் அமையவுள்ள தொழில் வளாக சாலை விரிவாக்கத் திட்டத்தை (**MUMBAI - BENGALURU Industrial Corridor** by the GoI, **may be extended upto Coimbatore**) தொழில் வளர்ச்சி மிகுந்த கோவை மாவட்டம் வரை விரிவுப்படுத்தக் கோரியும், மத்திய அரசினால் தேர்ந்தெடுக்க உத்தேசித்துள்ள உலகத்தரம் வாய்ந்த நகரங்களாக உருவாக்கும் 10 நகரங்களின் பட்டியலில் (World Class Cities) கோயம்புத்தூர் மாநகரை இணைத்திட வேண்டும் எனவும், கோவை மாவட்டம் கொடிசீயா வளாகத்தில் அமையவிருக்கும் Defence Innovation Centre-க்கு ஆதாய நிதியாக ரூ.20 கோடியினை விடுவிக்க கோரியும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

இதனால், இப்பகுதியைச் சேர்ந்த சுமார் 4,000 சிறுகுறு தொழில் நிறுவனங்கள், இராணுவ தளவாட நிறுவனங்களுக்கு உற்பத்திப் பொருட்கள் செய்து வழங்க இயலும். இந்நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், மாவட்டத்தின் வளர்ச்சிக்கும் இவை பெரும்துணையாக இருக்கும்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**